10.04.2023 எச்.எம்.ஓ.பி எண். 167/2019 ம.சா.1 பெருமாள்

குறுக்கு விசாரணை

எதிர்மனுதாரர் என்னுடைய மனைவி. நானும் எதிர்மனுதாரரும் காதலித்து திருமணம் செய்துகொண்டோம். நானும் எதிர்மனுதாரரும் பெற்றோர்களுக்கு தெரியாமல் வீட்டை விட்டு சென்றுவிட்டோம். அதன்பிறகு எங்களுடைய பெற்றோர்கள் தேடிகண்டுபிடித்து திருமணம் செய்துவைத்தார்கள். 2004 ஆம் ஆண்டு திருமணம் ஆனது. திருமணத்திற்கு பிறகு 13 ஆண்டுகள் நன்றாக குடும்பம் நடத்திவந்தோம். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் சக்தி, எழிலரசி என இரண்டு குழந்தைகள் பிறந்தார்கள். மகள் 12 ஆம் வகுப்பு படித்துவருகிறார். மகன் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்துவருகிறார். நான் பிரியாணி மாஸ்டராக வேலை செய்துவருகிறேன். மாதம் ரூ.15,000 - ரூ.20,000/- சம்பாதித்து வருகிறேன். சமையல் வேலைக்கு சென்றால் ஒருநாள் இரண்டுநாள் கழித்து தான் வீட்டிற்கு வருவேன். நான் வீட்டிற்கு காலதாமதமாகவும், குடித்துவிட்டும் வருவேன் என்று சொன்னால் தவறு, நான் குடிப்பதை விட்டுவிட்டு 13 ஆண்டுகள் ஆகிறது. குடிப்பதை விட்டு 13 ஆண்டுகள் ஆகிறது என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மாங்கால் கூட்ரோடு ஜீ கம்பெனியில் வேலைக்கு சென்றார். நான் வேண்டாம் என்று தான் சொன்னேன். நான் எதிர்மனுதாரரிடம் கம்பெனிக்கு செல்லவேண்டாம் என்று சொன்னதால் எதிர்மனுதாரர் 25.05.2019 ஆம் தேதி வேலையை விட்டுவிட்டு நின்றுவிட்டார் என்றால் சரியல்ல. நான் எவ்வளவோ சொல்லியும் எதிர்மனுதாரர் செய்கையில் மாற்றம் ஏற்படவில்லை என தவறாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வேலையை விட்டுவிட்டு நின்றபிறகு நான் வீட்டிற்கே சரிவர வருவதில்லை என்றால் சரியல்ல. நான் குடும்பத்தையும், பிள்ளைகளையும் கவனிப்பதில்லை என்றால் தவறு. நான் குடித்துவிட்டு கொடுமை செய்ததால் எதிர்மனுதாரர் மகளை அழைத்துக்கொண்டு பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் தவறு. மகன் என்னுடன் தான் இருந்துவருகிறார். என் மகன் கேட்டும் பொருட்களை எல்லாம் வாங்கிகொடுக்கிறேன் என்றால் என் மகன் சம்பாதித்து

அவரே வாங்கிக்கொள்கிறார். நான் என் மகனுக்கு கேட்கும் பொருட்களை வாங்கிகொடுத்து எதிர்மனுதாரருக்கு எதிராக தூண்டிவிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கும் வீராசாமிக்கும் தொடர்பு உள்ளதாக சொல்லும் சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது, என் மகன் சொல்லிதான் தெரியும். நான் சொல்வதுபோல் எதிர்மனுதாரருக்கும் எந்த நபருக்கும் தொடர்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகன் என்னுடைய கட்டுப்பாட்டில் உள்ளதால் எதிர்மனுதாரருக்கு எதிராக தூண்டிவிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. செல்போனில் இருந்த சிம்கார்டை உடைத்துவிட்டார் சிம்கார்டு இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், அது என்னுடைய கற்பனை என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் வேலைக்கு சென்று அந்த சம்பளத்தை என்னிடம் தான் கொடுத்துவந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சம்பளத்தை என்னிடம் தான் கொடுத்துவந்தார் என்றும், அதை நான் குடித்தும், சீட்டாடியும் அழித்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் கண்டித்து கேட்டதால் எதிர்மனுதாரர் மீது வீண் பழி சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவருடைய பாட்டி வீட்டில் தூங்கிகொண்டிருந்தபோது நான் திடீரென சென்று கட்டையால் அடித்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அடித்ததில் எதிர்மனுதாரருக்கு காது ஜவ்வு கிழிந்துவிட்டதாக மருத்துவர் சான்று உள்ளது என்றால் தவறு. நான் அடித்தபிறகு எதிர்மனுதாரரை அவர் தம்பியுடன் அனுப்பிவைத்தேன் என்று சொன்னால் தவறு. 3 பவுன் நகையும், செலவிற்காக ரூ.40,000/- கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அந்த நகையையும், பணத்தையும் நான் சீட்டாடி அழித்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வருடசெலவிற்கு பணம் வேண்டுமென கேட்டதால் 2019 ஆம் ஆண்டு எதிர்மனுதாரர் நகையை அடமானம் வைத்து ரூ.16,000/- பணம் கொடுத்தார் என்றால் தவறு. பின்னிட்டு 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கலுக்கு பிள்ளைகளுக்கு துணி எடுக்க பணம் கேட்டதால் எதிர்மனுதாரர் நகையை அடமானம் வைத்து பணம் கொடுத்தார் என்றால் 2019 ஆம்

ஆண்டு அவர் என்னுடனே இல்லை. எதிர்மனுதாரர் சொந்த ஊர் ஆற்காடு அருகில் உள்ள சர்வந்தாங்கல். எதிர்மனுதாரர் அவருடைய பெற்றோர் ஊரில் ரூ.50,000/- சீட்டு கட்டிவந்தார் என்றும், நான் அவசரத்திற்கு கேட்டதால் ரூ. 36,000/- தள்ளி எனக்கு எடுத்துகொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனைவி என்ற முறையில் எனக்கு மேற்சொன்னவாறு பணத்தை கொடுத்துவந்துள்ளார் என்றும், நான் தான் அவரை உதாசீனப்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு அவருடைய பெற்றோர்கள் நகை எதுவும் போடவில்லை. பாத்திரங்கள் தான் கொடுத்துள்ளார்கள். எதிர்மனுதாரருக்கு அவருடைய பெற்றோர்கள் கொடுத்த நகை, சீர்வரிசை பொருட்கள் என்னுடைய வீட்டில் உள்ளது என்று சொன்னால் அவர் தான் என்னுடைய நகைகளை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். நகையை எடுத்துக்கொண்டு ஓடிசென்றது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர் நகை எதுவும் எடுத்துக்கொண்டு செல்லவில்லை என்றும், நான் தவறாக நகை எடுத்துசென்றதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கு நிலுவையில் உள்ளபோதே வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் தவறு. நான் அந்த பெண்ணை திருமணம் செய்துகொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவிலும், முதல் விசாரணை உறுதிகூற்றிலும் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. பிள்ளைகளின் நலனுக்காக நான் பிரச்சனை எதுவும் செய்யவில்லை என்றால் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.